# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

சென்னை 600 006

ந.க.எண்: 28584/அ3/இ1/2013, நாள்: 29.07.2013

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி உதவியாளர் பதவியிலிருந்து (இருக்கைப்பணி) கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்க 15.3.2013 நாளின்படி தேர்ந்தோர் பட்டியல் வெளியிடுதல் சார்பு.

பார்வை
1. அரசாணை எண்: 707 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 03.07.1981
2. அரசாணை 2 (டி) எண் 38 பள்ளிக் கல்வி (ஆர் 2) துறை நாள் 23.07.2009
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செ.மு நக.எண் 28584/அ3/இ1/13 நாள் 27.5.13 மற்றும் 26–07–2013.
4. முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு விண்ணப்பங்கள்.

=====

பார்வை(3)ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளை தொடர்ந்து 15–03–2013 தேதியவாறு, உதவியாளர் பதவியிலிருந்து இருக்கைப் பணி கண்காளிப்பாளர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த பணியாளர்களின் தேர்ந்தோர் பெயர் பட்டியல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்த தேர்ந்தோர் பெயர் பட்டியலானது சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் W.P.No. 15318/2009, W.P.No.25095/2009, W.P.(MD) No.5300/2010, W.P.(MD)No.5301/2010 மற்றும் W.P.No. 29677/2012 ஆகியவற்றில் வழங்கப்படும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மீது அந்தந்த துறை இயக்குநர்களால் மற்றும் பிறத் துறை இயக்குநர்கள் மற்றும் அலுவலகத் தலைவர்களால் ஒழுங்கு நடவடிக்கை தொடுக்கப்பட்டு நிலுவையிலிருப்பின் அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பின் விளைவுகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும், இதனை முதன்மைக் கல்வி அலுவலகத்தின் தகவல் பலகையில் ஒட்டி வைப்பதுடன் அனைத்து சார்நிலை அலுவலகங்கள் மற்றும் பணியாளர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: 15–03–2013 நாளின்படியான தேர்ந்தோர் பெயர் பட்டியல்.

(ஒம்/–) ச. கண்ணப்பன்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (இ மெயில் மூலம்)
நகல் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இ மெயில் மூலம்)
நகல் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்
நகல் அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல் அனைத்து முதல்வர்கள்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
நகல் அனைத்து மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்
நகல் அனைத்து இயக்குநர்கள்
தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
மேலும் இணைப்பிலுள்ள முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மீது தங்கள் அலுவலகத்தில் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் இருப்பின் அதன் விவரத்தினை உடன் இவ்வியக்கத்திற்கு தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.